6. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–37 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.